**செய்தி வெளியீடு எண்:051** **நாள் :30.01.2015**

**புகையிலைப் பொருட்கள் மீதான வரிஏய்ப்பு செய்வோரிடமிருந்து ரூ.1.09 கோடி தண்டம் வசூல்**

~~~~~

தமிழ் நாட்டில் முதற்கட்ட விற்பனைக்கு புகையிலைப் பொருள்களுக்கான விற்பனை வரி 30 சதவீதமென நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

புகையிலைப் பொருட்கள் பிற மாநிலங்களில் இருந்து கொள்முதல் செய்யப்பட்டால் தமிழ் நாட்டில் முதற்கட்ட விற்பனை வரி 30% செலுத்த வேண்டும். ஆய்வு மேற்கொள்ளும்போது வணிகர்கள் தங்கள் வணிக தலத்தில் இருப்பில் உள்ள புகையிலைப் பொருள்களுக்கான கொள்முதல் பட்டியலினை கட்டாயம் வைத்திருக்க வேண்டும். கொள்முதல் பட்டியல் இல்லாமலும், பதிவு செய்யப்படாத கிட்டங்கிகளிலும் புகையிலைப் பொருட்களை வைத்திருந்தாலும், முறையான வரியினை செலுத்தத் தவறினாலும் அவ்வணிகர்கள் மீது சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படும்.

தமிழ்நாடு முழுவதும் உள்ள இரயில் நிலையங்கள், ஆம்னி பேருந்துகள், சுங்கச்சாவடி, சில்லறை மற்றும் மொத்த விற்பனை கடைகளில் திடீர் ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. 27.01.2015 அன்று மட்டும் கோவைக் கோட்டத்தில் வணிக நிறுவனங்களில் ஆய்வு மேற்கொண்டு புகையிலைப் பொருட்களை கொள்முதல் பட்டியல் இல்லாமலும், பதிவு செய்யப்படாத கிட்டங்கிகளிலும் இவ்வாறாக இருப்பு வைக்கப்பட்டிருந்த வணிகர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு ரூ.41.29 லட்சம் அபராதம் மற்றும் வரியாக வசூலிக்கப்பட்டுள்ளது. சென்னை செயலாக்க கோட்டம்–1ல் வரிஏய்ப்பு செய்ய வணிகர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு ரூ.29 லட்சம் அபராதம் மற்றம் வரியாக வசூல் செய்யப்பட்டது. மேலும், சென்னை செயலாக்க கோட்டம்–2ல் இவ்வாறான வணிகர்களிடமிருந்து ரூ.13 லட்சம் வரி வசூல் செய்யப்பட்டது. 25.01.2015 அன்று ஆந்திர மாநிலத்திலிருந்து பயணிகள் பேருந்து மூலமாக தமிழகத்திற்கு கடத்திவரப்பட்ட புகையிலைப் பொருட்களும், பேருந்தும் பறிமுதல் செய்யப்பட்டு ரூ.10 லட்சம் அபராதம் மற்றும் வரி வசூல் செய்யப்பட்டது. வேலூர் கோட்டத்தில் கடைகள் மற்றும் வாகனங்களை சோதனை செய்ததில் ரூ.16 லட்சம் அபராதம் மற்றும் வரி வசூல் செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் இதுபோன்ற ஆய்வுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. வரி ஏய்ப்பு செய்யும் வணிகர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கப்படுகிறது.

முதன்மை செயலர்/
வணிகவரி ஆணையர்

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**
~~~~~